# இலங்கையில் கருத்து வேறுபாட்டின் அடக்குமுறை

## புதிய ஜனாதிபதி பதவியின் 100 நாட்களில்

## 2015 ஜனவரி 9 - ஏப்ரல் 19



1990 பெப்ரவரி 18 அன்று பொலிஸாரினால் கடத்தப்பட்டு, கொல்லப்பட்ட நன்கு அறியப்பட்ட இதழியலாளர் ரிச்சர்ட் டீ செய்ஸா மீதான திரைப்படமொன்றின் தயாரிப்புக்கு அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை.


INFORM Human Rights Documentation Centre

www.ihrdc.wordpress.com informcolombo@gmail.com

**உள்ளடக்கம்:**


1. பிரிட்டிஷ் அமைச்சருடன் பேச வேண்டாம் என இடம்பெயர்ந்தவர்களை இராணுவம் அச்சுறுத்தியது
2. தமிழ் வாராந்தரியின் விநியோகஸ்தருக்கு இலங்கை இராணுவச் செயற்பாட்டாளர்களிடமிருந்து மரண அச்சுறுத்தல்
3. மூன்று தமிழ் இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்
4. சார்த்துரைக்கப்பட்ட தவறான அறிக்கைக்காக தமிழ் இதழியலாளர் விளக்கமறியல் வைக்கப்பட்டார்
5. துண்டுப்பிரசுர விநியோகம் குழப்பப்பட்டதுடன், ராஜபக்ஷ சார்புக் குழுவினால் செயற்பாட்டாளர்கள் தாக்கப்பட்டனர்
6. இன்னொரு தொலைக்காட்சி நிலையம் தனது குழுவினரைத் தடுத்து வைத்து, தாக்கியதாக தொலைக்காட்சி நிலையம் சார்த்துரைக்கின்றது
7. குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுப்புக்காவலில் 362 நாட்கள் வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட பெண் மனித உரிமைகள் காப்பாளர் மீது கட்டுப்பாடுகளை நீதிமன்றம் சுமத்துகிறது
8. சனல் 4க்கு ஆதரவளித்திற்காக கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டது
9. சந்தேகமான செயல்தொடர்பை மூடிமறைப்பதற்காக இதழியலாளர் தாக்கப்பட்டார்
10. வவுனியர் பிரஜைகள் குழுவின் தலைவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வரவழைக்கப்பட்டார்
11. கொல்லப்பட்ட இதழியலாளர் ரிச்சர்ட் டீ சொயிஸா மீதான திரைப்படத்திற்கு அனுமதி இல்லை
12. மனித உரிமைகள் காவலர் மீதான ஒரு வருடம் பழமையான வாய்ப்;பூட்டு உத்தரவை அகற்றுவதற்கு மறுப்பு
13. பல்கலைக்கழக மாணவர் எதிர்ப்பு மீது பொலிஸ் தாக்குதல்கள்
14. பொலிசாருக்கு எதிரான போராட்டக்காரர்களுக்கு எதிராக கண்ணீர் புகை பயன்படுத்தப்பட்டது
15. பொலிசாரினால் பௌத்த பிக்குவான செயற்பாட்டாளர் தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டார்


*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் (INFORM) நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. திட்டமிட்ட வகையிலும் மற்றும் அநேகம் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை தளமாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

**சாராம்சம்**


2014ஆம் ஆண்டுடனும், ராஜபக்ஷ ஆட்சியுடனும் ஒப்பிடுகையில், சிறிசேனவின் ஜனாதிபதி ஆட்சியில் முதல் 100 நாட்களின் போது கருத்து வேறுபாட்டுக்கு எதிரான தாக்குதலின்களினதும், பயமுறுத்தல்களினதும் மற்றும் அச்சுறுத்தல்களினதும் தீவிரத்தன்மையும், தொகையும் குறைவடைந்துள்ளன. எனினும், முன்னைய சம்பவங்களின் விலக்கீட்டுரிமையைக் கையாள்வதற்கு மிகச் சிறிதளவு நடவடிக்கையே எடுக்கப்பட்டதாகத் தோன்றுவதுடன், கவலைக்கிடமானவிதத்தில் கருத்து வேறுபாட்டினை அடக்கும் பெருமளவு சம்பவங்கள் இடம்பெற்றன.

மலையகத்தில், தலவாக்கெல்ல பொலிஸின் பாதுகாவலில் இருந்த ஒருவரின் மரணத்தைக் கண்டித்து தலவாக்கெல்ல பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருந்த கூட்டத்தினர் மீது கண்ணீர் புகைக்குண்டு வீசி அவர்களை மூர்க்கத்தனமாகக் கலைத்ததாக பொலிசார் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கொழும்பில், பெப்ரவரி 19 அன்று துண்டுபிரசுரங்களை விநியோகித்த சிவில் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் நுகேகொடையில் ராஜபக்ஷ சார்பு தேசிய சுதந்திர முன்னணியில் உறுப்பினர்களால் தாக்கப்பட்டனர். “யக்ஷகம்மானயவுக்கு முன்பு விமல் வீரவன்ஸவுக்கும், வாசுதேவவுக்கும் பத்துக் கேள்விகள்” என்ற வாசகத்தை துண்டுப் பிரசுரங்கள் கொண்டிருந்ததுடன், இவை ஜனநாயக மக்கள் அவையின் உறுப்பினர்களால் விநியோகிக்கப்பட்டன. மார்ச் 31 அன்று பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தின் எதிர்ப்புப் பேரணி பொலிசாரினாலும், விசேட செயலணியினாலும் தாக்கப்பட்டதுடன், இதில் சில மாணவர்கள் காயமடைந்து, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். விரும்பப்படாத கடந்த காலத்தை அது மீட்பிப்பதனால் கொல்லப்பட்ட இதழியலாளர் ரிச்சர்ட் டி சொயிஸா பற்றிய திரைப்படத்தின் விடயம் பொருத்தமற்றதென்றும், திரைப்படத்தைப் படமாக்குவதற்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது என்றும் அத்திரைப்படத்தின் இயக்குனருக்கு பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

வடக்கில், பிரிட்டிஷ் வெளிநாட்டு, பொதுநலவரசு அலுவலக அமைச்சர் ஹியூகோ ஸ்வெயருடன் அவர்களது வாழ்க்கை நிலைமைகளையிட்டு கலந்துரையாடுவதற்கு எதிராக இராணுவத்தினால் நிருவகிக்கப்படும் உயர் பாதுகாப்பு வலயமொன்றிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை சிவிலியன் உடையில் வந்த இலங்கை இராணுவத்தினர் எச்சரிக்கை செய்தனர். தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பிலான பத்திரிகையொன்றான *இது நம் தேசம்* என்ற தமிழ்; வாராந்திரியின் விநியோகஸ்தர் ஒருவர் இராணுவப் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்பட்டார். வடக்கில் இன்னொரு சம்பவத்தில், பொலிஸ் மேலாடைகளில் மது போதையில் இருந்து பொலிஸ் அலுவலர்கள் மூன்று இதழியலாளர்களை நிறுத்தி, கத்திகளைக் காட்டி அவர்களை அச்சுறுத்தியதுடன், அவர்களை துரத்தியும் சென்றார்கள். அனேகமாக வரலாற்றில் முதல் தடவையாக, இதழியலாளர் ஒருவர் (திட்டவட்டமாக, வடக்கிலிருந்து ஒரு தமிழ் இதழியலாளர்) “செய்தி விடயமொன்றின் வெளியீட்டுக்காக தவறான தகவலை வழங்கியமைக்காக” பொலிசாரினால் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டார். வவுனியா பிரஜைகள் குழுவின் தலைவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் வரவழைக்கப்பட்ட அதேவேளை, பௌத்த மத குருவான வண.வட்டருக விஜித தேரர் பொலிஸ் அலுவலர்களினால் தொந்தரவு செய்யப்பட்டார்.

இரு தனியார் தொலைக்காட்சி நிலையங்களின் இதழியலாளர்கள் முறையே சட்டவிரோதமாக பிரவேசித்தமை மற்றும் தாக்குதல் ஆகியனவற்றையிட்டு ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டினர். ஐக்கிய ராஜ்யத்தை தளமாகக் கொண்ட சனல் 4 தொலைக்காட்சி நிலையத்துடன் ஒத்துழைத்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கொழும்பில் பெருமளவானோர் கைதுசெய்யப்பட்டதுடன், சாதனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்நிலையம் ஏற்கனவே யுத்தக் குற்றங்களையிட்டு இலங்கை இராணுவத்தைக் குற்றஞ்சாட்டி ஆவணப்படங்களைத் தயாரித்திருந்தது. குற்றவாளிகளில் ஒருவர் மீது வெளிநாட்டுக்கான பிரயாணக் கட்டுப்பாடொன்றும் விதிக்கப்பட்டிருந்தது. அரசாங்கக் காணிகளை விற்பதற்கு தனிப்பட்டவர்கள் முயற்சிக்கிறார்கள் என்பது பற்றி அறிக்கைகள் தொடர்பில், புத்தளத்தில் இதழியலாளர் ஒருவர் தாக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

பெண் மனித உரிமைகள் காவலர் பாலேந்திரன் ஜெயக்குமாரிருக்கு எதிராகக் குற்றச்சாட்டு இன்றி விளக்கமறியல் மார்ச் 10 அன்று முடிவடைந்த அதேவேளை, அவர் மீது வெளிநாட்டுக்கான பிரயாணம் மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டதுடன், மாதத்தில் பொலிஸ் நிலையமொன்றுக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டார். INFORMஇன் மனித உரிமைகள் ஆலோசகர் ரூகி பெர்னாண்டோவின் கருத்துச் சுதந்திரத்தினதும், நடமாட்டத்தினதும் மீதான கட்டுப்பாடுகள் தொடர்வதுடன், அவருக்கு எதிராக விசாரணை இன்னும் நடந்துகொண்டேயிருக்கிறது.

### 1. பிரிட்டிஷ் அமைச்சருடன் பேச வேண்டாம் என இடம்பெயர்ந்தவர்களை இராணுவம் அச்சுறுத்தியது

வருகைதந்துள்ள பிரிட்டிஷ் வெளிநாட்டு, பொதுநலவரசு அலுவலக அமைச்சர் ஹியூகோ ஸ்வெயருடன் தமது நிலைமை குறித்து பேசக்கூடாதென ஜனவரி 28 அன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள வலிகாமம் வடக்கைச் சேர்ந்த இடம்பெயர்ந்த தமிழ் குடியிருப்பாளர்களை சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்திற்கு சிவில் உடைகளில் சென்ற இலங்கையின் இராணுவ ஆளணியினர் எச்சரித்தனர். "நீங்கள் தற்போதுள்ள காணிகள் உங்களுக்கு தேவையென வருகைதரும் அலுவலரிடம் நீங்கள் கூறுவீர்கள். அப்படிக் கூறவேண்டாம். பதிலாக, உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள காணிகளே உங்களுக்குத் தேவை எனக் கோருங்கள்" என இராணுவ அலுவலர் கூறியதாக முகாமில் உள்ள குடியிருப்பாளர் ஒருவர் குறிப்பிட்டார்.
http://www.tamilguardian.com/article.asp?articleid=13596

### 2. தமிழ் வாராந்தரியின் விநியோகஸ்தருக்கு இலங்கை இராணுவச் செயற்பாட்டாளர்களிடமிருந்து மரண அச்சுறுத்தல்

"இப் பத்திரிகையை நீர் தொடர்ந்துமே விநியோகித்தால் இப் பத்திரிகைகளுடன் சேர்த்து நீர் சாம்பலாகும் வரை எரிக்கப்படுவீர்" என்பதே ஒரு தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பு பத்திரிகையான *இது நம் தேசம்* என்ற தமிழ் வாராந்தரியின் விநியோகஸ்தர் ஒருவருக்கு இலங்கையின் இராணுவப் புலனாய்வு குழுவொன்றின் செய்தியாகும். இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த மூன்று செயற்பாட்டாளர்கள் மார்ச் 10 அன்று கிளிநொச்சியில் சிவநகரில் *இது நம் தேசம்* பத்திரிகையின் விநியோகஸ்தரைப் பின்தொடர்ந்துள்ளனர். சிவிலியன் சாட்சியாளர்கள் இல்லாத இடமொன்றில் விநியோகஸ்தரை நிறுத்திய குழுவினர், அவரிடமிருந்து பத்திரிகைகளைப் பறிமுதல் செய்ததுடன், மரண அச்சுறுத்தலையும் விடுத்தனர். இதை ஊடகங்களிடம் பாதுகாப்புக் காரணத்திற்காகத் தனது பெயரை வெளியிடாத விநியோகஸ்தர் கூறியிருந்தார்.
https://www.tamilnet.com/art.html?catid=13&artid=37687

### 3. மூன்று தமிழ் இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர்



ஏப்ரல் 7 அன்று இரு பொலிஸ் அலுவலர்களினால் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்ட மூன்று இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர். *தினசரி தினக்குரலின்* ரி.வினோஜித், கொழும்பைத் தளமாகக் கொண்ட இதழியலாளர் ரி.பிரகதீபன் மற்றும் சுதந்திரமாக இயங்கும் இதழியலாளர் மயூரபிரியன் ஆகியோர் பொலிஸ் மேலாடைகளுடன் மதுபோதையில் இருந்த இரு அலுவலர்களினால் நிறுத்தப்பட்டு, அவர்களது பத்திரிகை அடையாள அட்டைகளைக் காட்டுமாறு கேட்கப்பட்டனர். அலுவலர்களை இதழியலாளர்கள் விசாரித்த போது, இதழியலாளர்களிடம் கத்திகளை எடுத்துக்காட்டிய அலுவலர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் அடையும் வரை அவர்களைத் துரத்திச்சென்றார்கள்.
http://www.ifj.org/nc/news-single-view/backpid/1/article/sri-lanka-police-in-jaffna-criticised-for-arrest-and-intimidation-of-journalists/

### 4. சார்த்துரைக்கப்பட்ட தவறான அறிக்கைக்காக தமிழ் இதழியலாளர் விளக்கமறியல் வைக்கப்பட்டார்

தமிழ் தினசரி செய்திப்பத்திரிகையான *உதயனுக்காக* சுதந்திரமாக இயங்கும் இதழியலாளர் ஒருவரான என்.லோகதயாளன் நாட்டின் வடக்கில் உள்ள யாழ்ப்பாண நகரத்தில், நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொலிசாரினால் யுவதி ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறப்பட்ட செய்தியைப் பத்திரிகைக்கு எழுதியது

தொடர்பில் ஏப்ரல் 8 அன்று விளக்கமறியலில் வைக்கப்பட்டார். மூலமொனறைக் குறிப்பிடாமல் "செய்தி விடயமொன்றின் வெளியீட்டுக்காக தவறான தகவலை வழங்கியமை" தொடர்பில் லோகதயாளன் குற்றஞ்சுமத்தப்பட்டார். சிரேஷ்ட இதழியலாளர் ஒருவரின் கூற்றுப்படி, பெருமளவு ஊடக அறிக்கைச் செய்திகள் தவறானவையாக அல்லது பொய்யானவையாக என்று இருக்கும் போது, இலங்கையில் தவறான அறிக்கையொன்றுக்காக இதழியலாளர் ஒருவரைக் கைது செய்வது முன்சம்பவிக்காததாகும்.
https://cpj.org/2015/04/journalist-faces-charges-after-publishing-report-c.php

5. **துண்டுப்பிரசுர விநியோகம் குழப்பப்பட்டதுடன், ராஜபக்ஷ சார்புக் குழுவினால் செயற்பாட்டாளர்கள் தாக்கப்பட்டனர்**



தாக்குதலில் கல்யானந்த பெரேரா காயமடைந்தார் (Photo-LNW)

சிவில் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களைக் கொண்ட ஜனநாயக மக்கள் மன்றத்தைச் சேர்ந்த குழுவொன்று துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதில் ஈடுபட்ட போது தேசிய சுதந்திர முன்னணியின் உறுப்பினர்களால் தாக்கப்பட்டனர். 'யக்ஷகம்மானயவுக்கு முன் விமல் வீரவன்சவுக்கும், வாசுதேவவுக்கும் பத்து கேள்விகள்' எனத் தலைப்பிட்ட இந்தத் துண்டுப்பிரசுரம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டத்துடன் சேர்த்து பெப்ரவரி 19 அன்று நுகேகொடையில் பொது மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டது. தாக்குதலில் காயமடைந்த குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான கல்யானந்த பெரேரா மீரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்துள்ளார். பொலிஸாரினால் தாக்குதல் நடத்தியோரில் இருவர் கைது செய்யப்பட்ட போதிலும்ää வழக்கு பதிவுசெய்யப்படவில்லை.
http://ceylontoday.lk/51-85177-news-detail-civil-activists-accuse-nff-of-assault.html &
http://lankanewsweb.net/news/10068-kalyananda-perera-accuse-wimal-weerawansa-for-hindering-the-democratic-people-s-forum

6. **இன்னொரு தொலைக்காட்சி நிலையம் தனது குழுவினரைத் தடுத்து வைத்து, தாக்கியதாக தொலைக்காட்சி நிலையம் சார்த்துரைக்கின்றது**

செய்தி விடயமொன்று வெளியிடப்பட்டமை தொடர்பில் பதிலிறுப்பொன்றைப் பெறுவதற்காக "TV Derana" என்ற இன்னொரு தொலைக்காட்சி நிலையத்திற்கு அதன் இதழியலாளர்கள் சென்ற போது அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு, தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டதாகவும், அவர்களது புகைப்படக்கருவிகள் எடுத்துச் செல்லப்பட்டதாகவும் MTV/MBC வலைப்பின்னல் சார்த்துரைத்துள்ளதாக ஊடகங்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது. தமது இடப்பரப்புக்குள் MTV/MBCஇலிருந்து இதழியலாளர்கள் சட்டவிரோதமாக பிரவேசித்தார்கள் என TV Derana வலியுறுத்துகின்றது. "மருதானையில் உள்ள தாபனத்தின்" கூற்றுப்படி மூன்று இதழியலாளர்களும் முன்கூட்டிய அங்கீகாரமின்றி அவர்களது இடப்பரப்புக்குள் பிரவேசித்ததாகவும், அது சரியென்றால், அது தவறான செயல் எனவும் பொலிஸ் பேச்சாளரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குணசேகர ஊடகங்களுக்குத் தெரிவித்தார். "மறுபுறத்தில், மருதானையில் உள்ள ஊடகத்தில் உள்ள சில ஊழியர்கள் மூன்று இதழியலாளர்களைத் தாக்கியுள்ளனர். இதுவும் தவறானதாகும்" என அவர் மேலும் தெரிவித்தார் (மருதானையில் உள்ள தாபனம் TV Derana சம்பந்தமானதாகும்)
http://www.dailynews.lk/?q=local/sirasa-vs-derana

### 7. குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுப்புக்காவலில் 362 நாட்கள் வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட பெண் மனித உரிமைகள் காப்பாளர் மீது கட்டுப்பாடுகளை நீதிமன்றம் சுமத்துகிறது




ஜெயகுமாரி தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட பின் (Photo: @RadeepG)

குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுப்புக்காவலில் 362 நாட்கள் இருந்த பின், 2015 மார்ச் 10 அன்று தடுப்புக்காவலில் இருந்து திருமதி பாலேந்திரன் ஜெயகுமாரி விடுவிக்கப்பட்டார். ஆனால், ஒவ்வொரு மாதமும் பொலிஸ் நிலையமொன்றில் முன்னிலைப்படுமாறு அவர் கேட்கப்பட்டதுடன், அவர் மீது கடல்கடந்த நாட்டுக்கான பிரயாணக் கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது. அவருக்கு எதிரான விசாரணை இன்னும் தொடருகின்றது. 2009இல் இராணுவத்திற்கு கையளிக்கப்பட்ட பின்னர் காணாமல் போன தனது சொந்த மகன் உட்பட காணாமல் போனவர்களுக்காக உண்மையையும், நீதியையும் நாடுகின்ற ஒரு முக்கியமான ஆதரித்துவாதாடுபவராக அவர் விளங்குகின்றார்.
https://freejeyakumary.wordpress.com/2015/03/10/jeyakumary-and-9-other-political-prisoners-released-today/

### 8. சனல் 4க்கு ஆதரவளித்திற்காக கடவுச்சீட்டு பறிமுதல் செய்யப்பட்டது

இலங்கை அரசாங்கத்திற்கும், இலங்கை இராணுவத்திற்கும் அவதூறு விளைவிக்கும் திரைப்படமொன்றைத் தயாரிப்பதற்காக ஐக்கிய ராஜ்யத்தில் உள்ள சனல் 4 தொலைக்காட்சி நிலையத்திற்கு உதவியளித்ததாகச் சார்த்துரைத்து கடல்கடந்த நாட்டுக்கான பிரயாணத்திலிருந்து ராமநாதன் அகினம் கொழும்பு நீதவானால் தடை செய்யப்பட்டார். சோதிப்பதற்காக அவரது கணினியையும், ஏனைய தொழில்நுட்ப சாதனங்களையும் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்புமாறு நீதவான் கட்டளையிட்டார். சனல் 4க்கு தகவலை வழங்குவதற்கு ராமநாதனுக்கு உதவியளித்த பெருமளவு வேறு சந்தேக நபர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக நீதிமன்றத்திற்கு பொரளைப் பொலிசார் தெரிவித்தனர். விசாரணைகள் இன்னும் முடியாததினால் அவர் நாட்டை விட்டுச் செல்வதை நிறுத்துமாறு பொலிசார் கேட்டுக்கொண்டனர்.
http://www.dinamina.lk/2015/03/31/_art.asp?fn=n15033124

### 9. சந்தேகமான செயல்தொடர்பை மூடிமறைப்பதற்காக இதழியலாளர் தாக்கப்பட்டார்



சந்தேகத்திலான காணிப் பிரச்சனை ஒன்றையிட்டு அறிக்கையிடுவதிலிருந்து தடுப்பதற்காக சில அறியப்படாத நபர்களினால் புத்தளத்தின் இதழியலாளர் ஹிரான் பிரியங்கர ஜயசிங்க தாக்கப்பட்டார். சம்பவம் புத்தளம், பாலாவியில் மார்ச் 23 அன்று நடைபெற்றது. சிகிச்சைக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் இதழியலாளர் ஹிரான் பிரியங்கர அனுமதிக்கப்பட்டார். அரசாங்கக் காணியொன்றைச் சட்டவிரோதமாக விற்பதற்காக முயன்ற சிலர் தன்னைத் தாக்கியதாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.
Ada Derana / http://goo.gl/qn5vqd

இதழியலாளர் ஹிரான் பிரியங்கர ஜயசிங்க (Photo: Jude Samantha)

**10. வவுனியர் பிரஜைகள் குழுவின் தலைவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வரவழைக்கப்பட்டார்**

மார்ச் 26 அன்று, வவுனியர் பிரஜைகள் குழுவின் தலைவர் கிருஷ்ணபிள்ளை தேவராசா பொலிஸின் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் முன் ஆஜராகுமாறு வரவழைக்கப்பட்டார். வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் காணாமல் போன மக்கள் குறித்து வவுனியாவில் இடம்பெற்ற ஒரு போராட்டம் உட்பட அண்மைய தொடரிலான போராட்டங்களுக்கு முக்கிய அமைப்பாளர் ஒருவராக தேவராசா விளங்கினார் என்பதுடன், கடந்த வருடம் தாக்கப்பட்ட பின்னர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்;சையும் பெற்றார். http://www.srilankamirror.com/news/item/3105-vavuniya-citizen-s-committee-head-to-tid



கிருஷ்ணபிள்ளை தேவராசா (Photo: Sri Lanka Mirror)

**11. கொல்லப்பட்ட இதழியலாளர் ரிச்சர்ட் டி சொயிஸா மீதான திரைப்படத்திற்கு அனுமதி இல்லை**

விரும்பத்தகாத கடந்த காலமொன்றை மீட்பிப்பது பொருத்தமற்றது என பொலிஸ் மா அதிபரினாலான அறிக்கையொன்றைக் குறிப்பிட்டு, கொல்லப்பட்ட ரிச்சர்ட் டி சொயிஸாவின் கொலை தொடர்பில் தயாரிக்கப்படவிருந்த திரைப்படத்தின் இயக்குனருக்கு எழுதியுள்ள பாதுகாப்பு அமைச்சு, திரைப்படத்தைப் படமாக்குவதற்கு அவருக்கு அனுமதி வழங்க முடியாது என அறிவித்துள்ளது. 1990 பெப்ரவரி 18 அன்று வெலிக்கடவத்த, ராஜகிரியவில் உள்ள அவரது வீட்டிருந்து சிவிலியன் உடைகளில் வந்த இராணுவ ஆளணியினரால் இதழியலாளர் டி சொயிஸா கடத்தப்பட்டார். அவர் சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டதுடன், மறுநாள் மொறட்டுவையில் உள்ள கொரலவெல கடற்கரையில் அவரது உடல் கண்டுபிடிக்கப்பட்டது. அவரது தாயாரினால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் மீது திரைப்படம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. காணாமல் போனவர்களின் தாய்மார்களை ஒன்றாகக் கொண்டுவருவதற்காக அன்னையர் முன்னணியை அவரது தாய் டாக்டர் மனோராணி சரவணமுத்து தாபித்தார். டி சொயிஸா கொல்லப்பட்டு 15 வருடங்களின் பின், 2005இல் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டார். http://english.srilankamirror.com/entertainment-mirror/item/2725-police-prohibits-film-on-richard-de-zoysa

**12. மனித உரிமைகள் காவலர் மீதான ஒரு வருடம் பழமையான வாய்ப்;பூட்டு உத்தரவை அகற்றுவதற்கு மறுப்பு**

கொழும்பில் உள்ள மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் நிலையமொன்றான INFORMஇன் ஆலோசகர் ஒருவரான மனித உரிமைகள் காப்பாளர் திரு.ரூகி பெர்னாண்டோவின் கருத்துச் சுதந்திரத்தினதும், நடமாட்டத்தினதும் மீது கட்டுப்பாடுகள் சுமத்தப்பட்ட ஒரு வருடத்தை 2015 மார்ச் 21 குறித்துரைத்தது. இக் கட்டுப்பாடுகள் பயங்கரவாத விசாரணைத் திணைக்களத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் கொழும்பு

நீதவானினால் விதிக்கப்பட்டன. ஒத்ததன்மையிலான நீதிமன்ற உத்தரவொன்றின் ஊடாக ரூகியின் இலத்திரனியல் சாதனமும் பறிமுதல் செய்யப்பட்டது. ரூகிக்கு எதிரான வழக்கை முடித்து வைத்து, கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் எனக் கோரி 2014 நொவம்பர் 5 அன்று சட்ட மா அதிபருக்கு அவரின் வழக்கறிஞர் தொகுப்புரைகளை மேற்கொண்டார். பிரயாணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் இருந்த போதிலும், விசாரணைகள் தொடர்வதாகவும், ஆதலினால் வழக்கினை முடிவுக்கு கொண்டு வரமுடியாதெனவும், பறிமுதல் செய்யப்பட்ட சாதனம் மீளளிக்கப்படாதெனவும், கருத்துச் சுதந்திரம் மீதான கட்டுப்பாடு தளர்த்தப்பட முடியாதெனவும் ரூகியின் வழக்கறிஞருக்கு அறிவிக்கப்பட்டது.




UNHRCஇல் பக்க நிகழ்வொன்றில் ரூகி பெர்னாண்டோ உரையாற்றுகின்றார், மார்ச் 2015

### 13. பல்கலைக்கழக மாணவர் எதிர்ப்பு மீது பொலிஸ் தாக்குதல்கள்

மார்ச் 31 அன்று தம்மால் ஒழுங்குபடுத்தப்பட்ட எதிர்ப்புப் பேரணியொன்றின் மீது பொலிசாரும், விசேட செயலணியினரும் தாக்கியதாக சார்த்துரைத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை அது தாக்கல் செய்யும் என பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனம் (Inter-University Students' Federation - IUSF) தெரிவித்தது. மோதலில் 24 பட்டதாரி மாணவர்கள் காயமடைந்ததாகவும், தமது தலைகளினதும், கால்களினதும் மீது குண்டாந்தடி தாக்குதலின் காரணமாக பாரதூரமான காயங்களுக்குள்ளான 10 பேர் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுவதாகவும் IUSF தெரிவித்தது. இதனிடையே, "இத்தகைய சம்பவங்கள் கவனத்திற்கெடுப்பது துரதிர்ஷ்டவசமானவை என்பதுடன், துயரமானவையுமாகும். எமது அழைப்புக்கு கவனமெடுத்து அவர்கள் பிரதிநிதிகளை அமைதியாக அனுமதிப்பதற்கு போராட்டக்காரர்கள் செயற்பட்டிருந்தால், இது ஒன்றுமே நடந்திருக்கமாட்டாது" என பிரதமரின் அலுவலகத்தினால் விடுவிக்கப்பட்ட விசேட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. பிரதமரின் அலுவலகத்திற்கு கடிதமொன்றைக் கையளிப்பதற்கான தமது நோக்கத்தினையிட்டு ஏதேனும் முன்கூட்டிய அறிவித்தலை IUSF வழங்கவில்லை, ஆனால், பதிலாக அதைப் பல்கலைக்கழக மான்யங்கள் ஆணைக்குழுவுக்கு தாம் கையளிக்கப்போவதாக்க் கூறினார்கள் என அறிக்கை மேலும் தெரிவித்தது.
http://www.ceylontoday.lk/51-89025-news-detail-iusf-to-go-to-hrcsl.html

### 14. பொலிசாருக்கு எதிரான போராட்டக்காரர்களுக்கு எதிராக கண்ணீர் புகை பயன்படுத்தப்பட்டது

பெப்ரவரி 1 அன்று தலவாக்கெல்ல ரயில் நிலையத்திற்கு அருகில் போராட்டக்காரர்களைக் கொண்ட குழுவொன்றைக் கலைப்பதற்காக பொலிசார் கண்ணீர்ப் புகைக்குண்டை வெடிக்க வைத்ததாக *அத தெரண* அறிக்கையிட்டிருந்தது. ஜனவரி 31 அன்று தலவாக்கெல்ல பொலிஸின் பாதுகாவலில் இருந்த வேளை, மரணமடைந்த ஒருவரின் சந்தேகத்திற்கிடமான மரணத்தைத் தொடர்ந்து போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், சனக்கூட்டத்தைக் கலைப்பதற்கு தாம் கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தவில்லை எனப் பொலிசார் மறுத்தரைத்தனர்.
http://www.adaderana.lk/news/29650/talawakelle-demonstrators-call-off-protest&



போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஒரு சில மணித்தியாலங்களுக்கு மலையக ரயில்வே வழியை தடைசெய்தனர். (Photo: Ada Derana)

### 15. பொலிசாரினால் பௌத்த பிக்குவான செயற்பாட்டாளர் தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டார்

ஜனாதிபதி சிறிசேனவுக்கு விலாசமிடப்பட்ட கடிதமொன்றில், தனது பகுதியில் உள்ள மக்களினால் முகங்கொடுக்கப்படும் பிரச்சனைகள் பற்றி ஜனாதிபதிக்கு மனுவொன்றைக் கையளிப்பதற்கு தான்; முயன்ற போது பொலிசார் தன்னைத் தடுத்து வைத்து தொந்தரவு செய்ததாக வண. வட்டருக விஜித தேரர் முறைப்பாடு செய்துள்ளார். மஹியங்கனையின் ஹெபரவ சந்தியில் தன்னை நிறுத்திய 15 பொலிஸ் அலுவலர்கள் தன்னைக் கொல்வதற்கு அடுத்த சந்தியில் 6 பேர் காத்திருப்பதாகக் கூறியதாக தேரர் குறிப்பிட்டார். அவரது நடமாடும் தொலைபேசியைப் பறிமுதல் செய்த பின்னர், கிராந்துருகோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அவரை பொலிசார் கூட்டிச்சென்றுள்ளனர். கடிதத்தின் பிரகாரம் சம்பவம் மார்ச் 21 அன்று இடம்பெற்றது. பௌத்தம் சாராத சமய சனசமூகங்களின் உரிமைகளுக்காக பௌத்த சனசமூகத்தினுள்ளிருந்து ஒரு பலமான குரலாக விஜித தேரர் விளங்கியதுடன், சமய ஒற்றுமையை விசேடமாக, கடந்த காலத்தில் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எதிராகக் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைக்கு மத்தியில் மேம்படுத்தினார். ஒரு தொகை தடவைகள் அவர் தாக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டதுடன், 2013 ஓகஸ்ட் முதல், அவர் ஒழுங்கு செய்திருந்த பத்திரிகை மகாநாடொன்று பொலிசாரின் முன்னிலையில் குழப்பப்பட்டது. ஆனால், சாட்சியம் இருந்த போதிலும், குற்றமிழைத்த யாரேனும் ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படவில்லை.
http://goo.gl/eVzxG4